**8308**

| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# தமிழ் - இரண்டாம் தாள்
# Language – Part A – TAMIL – Paper II

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு :* i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை தருக : $5 \times 1 = 5$

1. அறிவியல் அறிஞர்கள் செயற்கைக் கோளை விண்ணில் ஏவினர்.

   ( செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக )

2. தமிழின் இனிமையை அனைவரும் அறிவர்.

   ( வினா வாக்கியமாக மாற்றுக. )

3. பாவேந்தர் பாட்டு மிகவும் நன்று.

   ( உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக. )

4. சங்கீதா பொம்மை செய்தாள்.

   ( பிறவினை வாக்கியமாக மாற்றுக. )

5. பாரி புலவர்களுக்கு வாரி வழங்குவான்.

   ( பொருள்மாறாமல் எதிர்மறை வாக்கியமாக மாற்றுக )

6. காலைக் கதிரவன் கடலில் தோன்றும் காட்சி எவ்வளவு அழகானது !

   ( செய்தி வாக்கியமாக மாற்றுக )

7. இளங்கோ அருணிடம், ''நான் இன்று மதுரை செல்கிறேன்'' என்று கூறினான்.

   ( அயற்கூற்று வாக்கியமாக மாற்றுக. )

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்கள் **அனைத்திற்கும்** விடையளிக்கவும். 5 × 1 = 5

8. பின்வரும் ஏதேனும் *ஒன்றனுக்கு* மட்டும் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

அ) ''அடியற்ற மரம் போல''

ஆ) ''ஆயிரங்காலத்துப் பயிர்''

இ) ''குன்றின் மேலிட்ட விளக்குப் போல''.

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

பனை இலையால் கூரை போட்டனர்.

10. மரபுப் பிழை நீக்கி எழுதுக :

யானை அலறியதும், குதிரை கத்தியது.

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

என் பிரதர் காலேஜில் படிக்கின்றான்.

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக :

அடடா இசை கேளாத செவிகளா இவை இசை நுகராத செவிகளுக்கு என் பாடல் இனிக்காதே சரி இருக்கட்டும்.

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 = 6

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக. ( ஒன்றனுக்கு மட்டும் )

அ) தோன்றுக ஆ) பரிந்து.

14. பிரித்து எழுதுக.

அ) கருநிறத்தரக்கியர் ஆ) குறைவிலை.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்பு தருக. ( இரண்டனுக்கு மட்டும் )

அ) நல்லறம்

ஆ) திறன்

இ) வாழியர்.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 20 × 1 = 20

16. உயிர்நெட்டெழுத்துக்கள் மொத்தம் ...................... ஆகும்.

அ) ஐந்து

ஆ) ஆறு

இ) ஏழு

ஈ) பத்து.

17. ஆய்த எழுத்துக்குரிய மாத்திரை அளவு

அ) கால் ஆ) அரை

இ) ஒன்று ஈ) இரண்டு.

18. தொடர் மொழிக்கு எடுத்துக்காட்டு

அ) மனம் ஆ) வேங்கை

இ) நிலங்கடந்தான் ஈ) பொன்னி.

19. இப்பாடலின் பொருள் யாது ? என ஆசிரியர் மாணவனிடம் கேட்பது

அ) அறிவினா ஆ) அறியாவினா

இ) ஐய வினா ஈ) ஏவல் வினா.

20. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ...................... ஆகும்.

அ) வழுவமைதி ஆ) வழாநிலை

இ) வழு ஈ) காலவழு.

21. பதிவெண் என்பது ...................... எனப் பிரியும்.

அ) பதி + எண் ஆ) பதி + வெண்

இ) பதிவ் + எண் ஈ) பதிவு + எண்.

22. கோட்டையை முற்றுகையிடுதல் ...................... திணை.

அ) வெட்சி ஆ) காஞ்சி

இ) உழிஞை ஈ) நொச்சி.

23. மூன்று சீர்களைப் பெற்றுவரும் அடி ...................... ஆகும்.

அ) குறளடி ஆ) சிந்தடி

இ) அளவடி ஈ) நெடிலடி.

24. வெண்பாவின் வகைகள்

அ) நான்கு ஆ) ஐந்து

இ) ஆறு ஈ) ஏழு.

25. செய்யுளிசை அளபெடையை .............. என்றும் கூறுவர்.

26. செயல் நிகழ்வதைக் குறிக்கும் வினைமுற்று .............. எனப்படும்.

27. ஆடுவாயா ? என்பதற்குப் பாடுவேன் என்பது .............. விடை ஆகும்.

28. அகத்திணைகள் .............. வகைப்படும்.

29. ஐந்தடிகள் முதல் பன்னிரெண்டு அடிகள் வரை வருவது .............. வெண்பா எனப்படும்.

30. அணி என்ற சொல்லுக்கு .............. என்பது பொருள் .

31. பொருத்துக:

அ) குறிப்புப் பெயரெச்சம் — ஆதிரையான்

ஆ) குறிப்பு வினையெச்சம் — நல்ல மாணவன்

— மெல்ல நடந்தான்.

32. பொருத்துக:

அ) மருதம் — பரதர், பரத்தியர்

ஆ) நெய்தல் — ஆயர், ஆய்ச்சியர்

— உழவர், உழத்தியர்.

33. செல்வன் வந்தாள் என்பது ................ எனப்படும்.

அ) திணைவழு ஆ) பால்வழு

இ) இடவழு ஈ) காலவழு.

34. நிரைகவர்தல் ................ திணை.

அ) வெட்சி ஆ) கரந்தை

இ) வஞ்சி ஈ) காஞ்சி.

35. எல்லா அடிகளும் அளவடிகளாய் வருவது ................ ஆகும்.

அ) வெண்பா ஆ) ஆசிரியப்பா

இ) கலிப்பா ஈ) வஞ்சிப்பா.

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஆறனுக்கு** மட்டும் விடையளி : 6 × 2 = 12

36. முதலெழுத்துக்கள் எத்தனை ? அவை யாவை ?

37. பலகை - எவ்வாறு பொதுமொழியாகும் ?

38. தெரிநிலை வினைமுற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

39. எதிர்கால வினையெச்ச வாய்பாடுகள் யாவை ?

40. மரபு வழுவமைதியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

41. விடை வகைகளுள் இரண்டினைக் கூறுக.

42. முல்லைத் திணைக்குரிய கருப்பொருள் நான்கு எழுதுக.

43. குறள் வெண்பாவின் இலக்கணம் யாது ?

ஆ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் **ஆறனுக்கு** மட்டும் விடையளி : 6 × 2 = 12

44. ஔகாரக் குறுக்கத்தைச் சான்றுடன் விவரி.

45. ஒருபொருட் பன்மொழி என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

46. வெற்றிலை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

47. தும்பைத் திணையை விளக்குக.

48\. ''பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை

வெரூஉம் புலிதாக் குறின்''

\- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டுக.

49\. வஞ்சப்புகழ்ச்சியணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

*அல்லது*

சொற்பொருட் பின்வரு நிலையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

50\. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக :

''தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்

தன்னையே கொல்லுஞ் சினம்''.

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : $5 \times 2 = 10$

''திறப்பதென்றால் மனக்கதவைத் திறக்க வேண்டும்

தேய்ப்பதென்றால் கொடுமைகளைத் தேய்க்க வேண்டும்

துறப்பதென்றால் தீமைகளைத் துறக்க வேண்டும்

தொலைப்பதென்றால் பீடைகளைத் தொலைக்க வேண்டும்

மறப்பதென்றால் சூழ்ச்சி செய்ய மறக்க வேண்டும்

மடிவதென்றால் சோம்பல்தான் மடிய வேண்டும்

பறப்பதென்றால் அறியாமை பறக்க வேண்டும்

படிப்பதென்றால் வள்ளுவரைப் படிக்க வேண்டும்''.

*வினாக்கள் :*

அ) எதனைத் திறக்க வேண்டும் ?

ஆ) துறக்க வேண்டுவன எவை ?

இ) எது மடிய வேண்டும் ?

ஈ) பறக்க வேண்டுவது எது ?

உ) எதனைப் படிக்க வேண்டும் ?

VII. 52. நீ கண்டுகளித்த அறிவியல் கண்காட்சி குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக. 10

அல்லது

நும் குடியிருப்புப் பகுதியில் நூல்நிலையம் வேண்டி நூலக இயக்குநருக்கு விண்ணப்பம் வரைக.

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்று** குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : $1 \times 10 = 10$

அ) அன்றாட வாழ்வில் அறிவியல்

ஆ) சுற்றுச்சூழல் பாதுகாப்பும், மாணவர் பங்கும்

இ) தேசிய ஒருமைப்பாடு.

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் **ஒன்றனுக்கு** மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : $1 \times 10 = 10$

அ) சபேசன் காபி — வளர்ச்சியும் வீழ்ச்சியும்.

ஆ) புதிய பாலம் — கதையின் மூலம் நீ அறிந்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.

இ) 'விடிவதற்குள்' கதை வாயிலாக பங்கஜத்தின் குணநலனை விவரி.

ஈ) வேலை(ளை) வந்து விட்டது. — இக்கதைத் தலைப்பின் பொருத்தத்தை விவரி.